ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ துறப்பேன் ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ துறப்பேன் ‖

திருவிண்ணகர் - 3

‡துறப்பேன் அல்லேன்⋆ இன்பம் துறவாது⋆ நின்னுவரும்
மறப்பேன் அல்லேன்⋆ என்றும் மறவாது⋆ யான் உலகில்
பிறப்பேனாக எண்ணேன்⋆ பிறவாமை பெற்றது⋆ நின்
திறத்தேன் ஆதன்மையால்⋆ திருவிண்ணகரானே (1)

துறந்தேன் ஆர்வச் செற்றச்⋆ சுற்றம் துறந்தமையால்⋆
சிறந்தேன் நின்னடிக்கே⋆ அடிமை திருமாலே⋆
அறம் தானாய்த் திரிவாய்⋆ உன்னை என் மனத்தகத்தே⋆
திறம்பாமல் கொண்டேன்⋆ திருவிண்ணகரானே (2)

மானேய் நோக்கு நல்லார்⋆ மதிபோல் முகத்துலவும்⋆
ஊனேய் கண் வாளிக்கு⋆ உடைந்தோட்டந்துன் அடைந்தேன்⋆
கோனே! குறுங்குடியுள் குழகா!⋆ திருநறையூர்த்
தேனே⋆ வரு புனல் சூழ்⋆ திருவிண்ணகரானே (3)

சாந்தேந்து மென் முலையார்⋆ தடந் தோள் புணர் இன்ப வெள்ளத்-
தாழ்ந்தேன்⋆ அரு நகரத்தழுந்தும்⋆ பயன் படைத்தேன்⋆
போந்தேன் புண்ணியனே!⋆ உனையெய்தி என் தீவினைகள்
தீர்ந்தேன்⋆ நின் அடைந்தேன்⋆ திருவிண்ணகரானே (4)

மற்றோர் தெய்வம் எண்ணேன்⋆ உன்னை என் மனத்து வைத்துப்
பெற்றேன்⋆ பெற்றதுவும்⋆ பிறவாமை எம் பெருமான்⋆
வற்றா நீள் கடல் சூழ்⋆ இலங்கை இராவணனைச்
செற்றாய்⋆ கொற்றவனே!⋆ திருவிண்ணகரானே (5)

மையொண் கருங்கடலும்⋆ நிலனும் அணி வரையும்⋆
செய்ய சுடர் இரண்டும்⋆ இவையாய நின்னை⋆ நெஞ்சில்
உய்யும் வகை உணர்ந்தேன்⋆ உண்மையால் இனி⋆ யாது மற்றோர்
தெய்வம் பிறிதறியேன்⋆ திருவிண்ணகரானே (6)

வேறே கூறுவதுண்டு⋆ அடியேன் விரித்துரைக்கு
மாறே⋆ நீ பணியாதடை⋆ நின் திருமனத்து⋆
கூறேன் நெஞ்சு தன்னால்⋆ குணம் கொண்டு⋆ மற்றோர் தெய்வம்
தேறேன் உன்னை அல்லால்⋆ திருவிண்ணகரானே (7)

முளிந்தீந்த வேங்கடத்து⋆ மூரிப் பெருங்களிற்றால்⋆
விளிந்தீந்த மா மரம்போல்⋆ வீழ்ந்தாரை நினையாதே⋆
அளிந்தோர்ந்த சிந்தை⋆ நின்பால் அடியேற்கு⋆ வான் உலகம்
தெளிந்தே என்றெய்துவது⋆ திருவிண்ணகரானே (8)

சொல்லாய் திரு மார்வா!⋆ உனக்காகித் தொண்டு பட்ட
நல்லேனை⋆ வினைகள் நலியாமை⋆ நம்பு நம்பீ⋆
மல்லா! குடம் ஆடி!⋆ மதுசூதனே⋆ உலகில்
செல்லா நல்லிசையாய்!⋆ திருவிண்ணகரானே (9)

‡தாரார் மலர்க் கமலத்⋆ தடம் சூழ்ந்த தண் புறவில்⋆
சீரார் நெடு மறுகில்⋆ திருவிண்ணகரானைக்⋆
காரார் புயல் தடக்கைக்⋆ கலியன் ஒலி மாலை⋆
ஆரார் இவை வல்லார்⋆ அவர்க்கல்லல் நில்லாவே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖